நீர்ப்பாசன கூட்டுறவுக் கழகங்கள்

* 188 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதுவரையில் தமிழ்நாடு அரசு துவங்கியுள்ள நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) இவற்ருல் பயன்படும் நிலக்கிழார்கள் எத்தனே பேர் ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : (அ) 30—6—1973 முடிய தமிழ்நாட்டில் துவக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களின் எண்ணிக்கை 2,289 ஆகும்.

(இ) இவற்ருல் பயன்பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை 42,887.

திரு. சோ. அழகர்சாமி : இப்படிப்பட்ட நீர் ஏற்றப் பாசனச் சங்கங்கள் மாவட்டவாரியாக எவ்வளவு தொடங்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : அந்த விவரங்களுக்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சர் அவர்கள் 187-வது வினுவிற்கு பதில் அளிக்கும்போது லிப்ட் இரிகேஷன் சொசைட்டீஸ் எண்ணம் இரண்டாயிரத்து சொச்சம் என்று கூறினுர்கள். இந்த லிப்ட் இரிகேஷன் சொசைட்டிகளால் பயனடைகிற நிலப்பரப்பு எவ்வளவு என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : நிலப் பரப்பளவு கிட்டத் தட்ட 94,074 ஏக்கர் இப்போது பயன்பெறப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : I am raising a point of order. இந்தக் மூலக் கேள்வியே 'the number of Co-operative Irrigation Societies started so far in Tamil Nadu' என்பதாகும். அதிலிருந்து எழக்கூடியதுதான் மாவட்டவாரியாக எவ்வளவு என்பது. ஒன்று அவர்கள் அந்த அறிக்கையை இங்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். அதற்காகத் தனி நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னுல் என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லே. கேள்வி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு இருக்கின்றன என்ற விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் மாநிலம் பூராவும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவர அறிக்கையைக் கொடுத்திருக்க வேண்டும். தனி நோட்டீஸ் வேண்டுமென்ருல்

1973 நவம்பர் 19]

இதற்கு எவ்வளவு நாட்களாகும் என்று புரியவில்லை. ஆகவே அதற்குப் பதில் சொல்ல ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது இம்மாதிரி மூலக் கேள்விகளில் இருந்து எழக்கூடிய உப கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதற்கு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தமிழ்நாட்டில் எவ்வளவு என்றுதான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான பதிலைச் சொல்லி யிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டில் எத்தனை சிறு விவசாயிகள் இறைவைப் பாசனச் சங்கங்கள் இயங்கி வருகின்றன என்றிருக்கிறதே தவிர மாவட்ட வாரியாக என்று போடவில்லை. கேள்வியில் அப்படி இல்லை. மாவட்ட வாரியாக என்று இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: தமிழ்நாட்டில் என்றால் மாவட்ட வாரியாக விவ ரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றிக் கேட்டால் அதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் தமிழ்நாட்டில் என்று கேட்கும்போது இந்த விவரங்கள் அவர்களிடம் இருக்கும். ஒன்று உப கேள்விகள் கேட்காமலே இருக்கலாம். அல்லது அப்படி உப கேள்வி கேட்கும் போது நேரமாகிற தென்றால் விவர அறிக்கை கொடுக்கப்படும் என்று சொல்ல லாம் அல்லது விவர அறிக்கையையே கொடுத்திருக்கலாம். தமிழ்நாடு என்று வரும்போது முழு விவரங்களையும் அந்த அதிகாரிகள் கண்டிப்பாகக் கொடுத் திருக்க வேண்டும். ஒன்று அமைச்சர் அவர்கள் தயார் பண்ணாமல் வந்திருக்க வேண்டும். எனவே உப கேள்விகளுக்காக கண்டிப்பாக அதிகாரிகள் விவரங் களைக் கொடுக்கவேண்டும் என்பதை தாங்கள் டைரக்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தனிக் கேள்வி போடலாம் என்று சொல்லியிருக்கிறேன். வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் விவர அறிக்கை கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு முழுவதும் என்று கேட்கும் போது மாவட்ட வாரியாக தனித்தனித் கேள்வி போடுவது என்றால் அதற்கான விவரங்களைப் பெறுவதற்கு ரொம்ப நாளாகிறது. ரொம்ப பணச் செலவா கிறது. எனவே இந்த நேரத்தில் எல்லாவற்றிற்கும் ஆன்சர் செய்வதுமாதிரி இருக்கலாமே!

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாவட்டவாரியாக தகவல் வந்திருந்தால் அதை வெளியிடுவதில் என்ன கஷ்டம் ஏற்படும் என்பதை என்னைப் போன்றவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆகவே மாவட்டவாரியாக விவரங்களைத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக எவ்வளவு சங்கங்கள் என்று கேட்கப்பட்டிருந்தால் அதற்கான குறிப்புகளை அதிகாரிகள் எடுத்து வைத்திருக்க முடியும். சில நேரங்களில் அமைச்சர்கள் இப்படிப் பொதுவாகக் கேள்வி வருகிற நேரத்தில் மாவட்ட வாரியாகக் குறிப்புகள் வேண்டும் என்று கேட்டுப் பெறுவதும் உண்டு. நேரமில்லாத காரணத்தால் அதைப் பெற்றிருக்காமல் இருக்கக்கூடும். ஆகவே தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேகரிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விவரம் இல்லை என்று சொன்னார். இருந்தும் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை.

Huts in Island Ground area.

*189 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether a large number of huts have been removed from the Island grounds around March 1973 by the Slum Clearance Board; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) 1973 மார்ச் மாதத்தில் தீவுத் திடலின் அருகாமையிலுள்ள கூவம் நதிக் கரையோரத்தில், புதிதாகப் பலர் குடிசைகளை அமைக்கத் தொடங்கினர். குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அருகாமையில் கட்டப்படும் புதிய கட்டிடங்களில் குடியிருப்புகளைப் பெறுவதே அவர்களது நோக்கமாக இருந்தது. ஆகவே அவர்களை குடிசை மாற்று வாரியம் 24—3—1973 அன்று மேற்படி இடத்திலிருந்து வெளியேற்றியது. அப்படி வெளியேற்றப்பட்ட சுமார் 55 குடும்பங்களுக்கு கோட்டூர்புறத்தில் தீப்பிடிக்காத வீடுகளில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU N. DENNIS: Sir, may I know whether steps of this kind would be taken in other similar places ?